# சத்திய சாய் பாபா



சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி

# காணிக்கை

## திரு அருட்பா தந்த

### திருவருட் பிரகாச வள்ளலார்

### இராமலிங்க சுவாமிகள்

### பொற்பாதங்களில்

### பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்




| | |
|---|---|
| தோற்றம் | : 05-10-1823 |
| சன்மார்க்க சங்கம் | : 1865 |
| சத்திய தருமச்சாலை | : 1867 |
| சித்தி வளாகம் | : 1870 |
| சத்திய ஞான சபை | : 1872 |
| ஒளியாகி எங்கும் நிறைந்தது | : 30-01-1874 |

# சத்திய சாய் பாபா




## சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

17/49F, கருணை இல்லம்

கலைஞர் குடியிருப்பு

கன்னியாகுமரி - 629 702

Cell : 92451 53454

# பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | சத்திய சாய் பாபா |
| ஆசிரியர் | : | சிவ செல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | S.S. சுயம்ஜோதி |
| வெளியிடுவோர் | : | சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49F, கருணை இல்லம், கலைஞர் குடியிருப்பு<br>கன்னியாகுமரி - 629 702 |
| முதல் பதிப்பு | : | சத்திய சாய் பாபா 81-வது பிறந்த நாள்-23-11-2006<br>1000 பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. 25 |
| கிடைக்குமிடம் | : | ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001<br>Ph : 04652 - 221307<br><br>R. சிவலிங்கம்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>K.M.A. கார்டன், சின்னாண்டிமடம்,<br>கொடுங்கையூர், சென்னை - 600 118<br>Cell - 94443 62227<br><br>N. கோபால் சாமிராவ்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>C-3, பஞ்சாப்ரோடு, பிளாக் - 4,<br>நெய்வேலி - 607 801. Cell : 94438 76394 |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில். Ph : 233853 |



## ஆசிரியரின் பிற ஞான நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| கண்மணி மாலை | ரூ. 50 | செல்வமே சீர் தாருமே | ரூ. 10 |
| அருள்மணி மாலை | ரூ. 50 | செந்திலாண்டவன் பாமாலை | ரூ. 10 |
| ஸ்ரீபகவதி அந்தாதி | ரூ. 10 | அன்பு உதய மலர் | ரூ. 10 |
| அருட்பெருஞ்ஜோதி அந்தாதி | ரூ. 10 | வள்ளலார் விழியே | ரூ. 20 |
| சன்மார்க்க தெய்வம் | ரூ. 10 | ஜோதி மணிமாலை | ரூ. 20 |
| சற்குரு கோவிந்த சுவாமிகள் | ரூ. 10 | ஜோதி ஐக்கூ அந்தாதி | ரூ. 100 |
| அஷ்டமணி மாலை | ரூ. 50 | சற்குரு ஜக்கி வாசுதேவ் | ரூ. 25 |

**வாங்கி! படித்து! உணர்ந்து? வாழ்வாங்கு வாழ்க!**

ஸ்ரீ ஷிர்டி பாபா



விஸ்வரூப பாபா




ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர்



ஸ்ரீ மகாவதார பாபாஜி



ஸ்ரீ ராகவேந்திரர்



ஸ்ரீ குகைநாத சுவாமி



ஸ்ரீ அருகம்புல் சித்தர்



ஸ்ரீ குருமகாதேவ்



ஸ்ரீ மௌன குருசுவாமி



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
17/49F, கருணை இல்லம், கலைஞர் குடியிருப்பு,
கன்னியாகுமரி - 629 702

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழி காட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பாலவிநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர்தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர்தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள

விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜுவல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலையில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது.

பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டு நூற்களைத் தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின் 50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில், 1992-ம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதி ஸ்ரீ G. கோபாலகிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும், அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் “செல்வமே சீர் தாருமே” நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடு கலந்துவிட்ட ஜோதி ஸ்ரீ R. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிட்டார்.

பதினெட்டாவது நூலாக “செந்திலாண்டவன் பாமாலை” 11-4-2006 பங்குனி உத்திர நாளில் என் வணக்கத்திற்குரிய பெரியவர் R. துரைசாமி அவர்களும் அன்பின் இனிய நண்பர் S.B. சுப்பையா அவர்களும் வெளியிட்டார்கள். நன்றி நன்றி.

பத்தொன்பதாவது நூலாக “அன்பு உதய மலர்” 14-4-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ இராஜப்பா வெளியிட்டு புண்ணியத்தை தேடிக் கொண்டார்கள்.

இருபதாவது நூலாக வள்ளலார் விழியே 14-04-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக, ஆசிரியரின் 50 வயது பொன் விழா வெளியீடாக, சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கணேஷ் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள். அவர்கள் இறைவன் அருளால் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ பிரார்த்திக்கின்றேன்.

இருபத்தோராவது நூலாக இந்த ஜோதிமணி மாலை 24-07-06 ஆடி அமாவாசையன்று நெய்வேலி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க ஜோதி ஸ்ரீ நிர்மலா தேவி அவர்கள், மகன் ஜோதி ஸ்ரீ நகுலன், அவர்கள் மருமகள் ஜோதி ஸ்ரீ Dr. இரா. அருள்மொழி ஆகியோரது பரிபூரண அன்பால், உதவியால் வெளிவருகிறது.

இருபத்திரண்டாவது நூலாக இந்த ஜோதி ஐக்கூ அந்தாதி நம் இந்திய திருநாட்டின் 59வது சுதந்திர தினமான 15-08-2006 ல் சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கோபி சிவம் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்து மூன்றாவதாக “சற்குரு ஜக்கி வாசுதேவ்” 2006 செப்டம்பர் ஈசா திருவிழாவின் போது நாகர்கோவில் அன்பர் பிரபாகர் வெளியிட்டு புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்து நான்காவதாக “சத்திய சாயி பாபா” 2006 நவம்பர் 23-ல் பாபாவின் 81-வது பிறந்த நாளில் நாகர்கோவில் சமிதி அன்பர் S. கிருஷ்ண பிள்ளை அவர்கள் வெளியிட்டு புண்ணியம் பெற்றார்.

எம்மை வாழ வைக்கும் சென்னை மும்மூர்த்திகள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி. ஸ்ரீ. G. நாராயணா, ஜோதி. ஸ்ரீ. G. கோபால கிருஷ்ணன் ஆகியோருக்கு என்றென்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். நன்றி.

சென்னை அன்பர் R. சிவலிங்கம், சண்முகம், நெய்வேலி அன்பர் N. கோபால் சாமிராவ், நிர்மலா தேவி ஆரல்வாய்மொழி N. கனக சபாபதி, நெல்லை மோகன், நாகர்கோவில் பிரபாகர், சி. சுப்பிரமணியம், பரமேஸ்வரன், நீலகண்டன், சுயம்பு கேசவன், இந்திரா பாய், M.G. ராஜா, R. சேகர் அனைவருக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். நன்றி. நன்றி.

எல்லோரும் சீரும் சிறப்புமாக வாழ்வாங்கு வாழ இறைவனை வேண்டுகிறேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

என்றும் உண்மையுள்ள,

**சிவ. செல்வராஜ்,**

கன்னியாகுமரி.

# சத்திய சாய் பாபா

## "பிரசவம் அல்ல பிரவேசம்"

இன்றைய உலகின் நடமாடும் கடவுள் பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபா.

எல்லோரையும்போல பிரசவத்தில் வந்தவர் அல்ல! பிரவேசமாகி உலகை இரட்சிக்க அவதாரம் எடுத்தவர்.

அடுத்து பிரவேசமாகும் இடம், தாய் பற்றியெல்லாம் அறிவித்த அன்பு உருவம்.

கடந்த 80 வருடமாக இப்புவியை காத்து அருளும் தெய்வம்.

புண்ணிய பூமியாம் இந்தியாவில் ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் 192 நவம்பர் 23-ல் தோன்றினார். அன்றிலிருந்தே அற்புதம்! அதிசயம்! ஆச்சர்யம்! பாபாவின் அருள் விளையாட்டுக்கள் ஒன்றா? இரண்டா? உலகம் முழுவதும் பாபாவால் ஆட்கொள்ளப்பட்டவர் ஏராளம் ஏராளம்.

செய்த சேவைகள் கணக்கிலடங்காது! பக்தர்களோ கோடானுகோடி! புண்ணியம் பெற்றவர்களும் கோடானு கோடி!

அடியேன் செய்த புண்ணியம் பலமுறை பகவானை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது! சூட்சம நிலையில் காட்சி தந்து அருளியதும் பலமுறை!

நேரில் "உட்காரு! உட்காரு!" என அருள்வாக்கு அருளினார்.

"நான்தான் உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறேனே" என்ற ஆறுதல் மொழி! அருளினார்.

கண்ணியனானேன். இப்பிறவி புனிதம் அடைந்தது. சாந்தஸ்வரூபி, சக்திகேந்திரம், சர்வவியாபி, சர்வ வல்லமை பெற்றவர் சத்திய சாய்பாபா!

அவர்தம் மகிமையை சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

அவர் பிரவேசத்தால் சின்ன ஊர் இன்று மாபெரும் நகரமாக விளங்குகிறது.

பக்தர்கள் அறிவர் பகவான் பாபாவின் மகிமை! புட்டபர்த்திக்கு வாருங்கள்!

பாபாவின் தரிசனம் பெறுங்கள்!

அன்பு உருவந்தாங்கி நடமாடுவதை காணுங்கள்!

பக்தியுடன் வாருங்கள் பாவம் தீரும்!

பாபா அருளால் முக்தியும் கிட்டும்!

பிறவிப்பிணி தீர பாபா கருணை புரிவார்!

# சத்திய சாய் பாபா

அகிலம் காக்கும் அற்புத பாபா
புகலிடம் உன்னிடம் பொற்பதம் அருளே
சகியாக சன்மார்க்க சங்கத்தார் வரவே
சுகிக்க ஞானத்தை சுந்தரா தருகவே

ஆருயிர் நீதானே ஆண்டவா பாபா
பாருயிர் எல்லாமே பாபாநீ யல்லவோ
சாருவேன் சத்திய சாயி பாதமே
மாறுவேன் மனிதனாய் மகானாய் உன்னாலே

இகபர வாழ்வில் இன்பம் அருளே
அகவிருள் நீக்கி அன்பே உருவாய்
சுகமாய் இருக்க சத்திய சாயியே
அகமிருந் தருள் ஆனந்த ரூபனே

ஈனமிலா வாழ்வை ஈதிடு பாபா
ஊனமிலா மனதை ஊர்த்துவ மேற்று
தானமிலா நிலையை தராதே தயாபரா
ஞானமிலா மனிதன் ஞாலத்தில் வாழ்வாரோ

உத்தம ஞானி உன்னத மேனி
பத்தரை மாற்று பசும்பொன் அல்லவோ
இத்தரை மீதினில் இவர்போல் யாருண்டு
அத்தனை யுஞ்சேர்ந்த அவதார மல்லவோ

ஊரில் சிறந்த உத்தமர் பார்த்தியிலே
சீரில் நிற்கும் சிவமே திருவே
ஆறில் அடங்கி ஆண்டு இருப்பவனே
சேரில் சத்தியம் சமரசம் சன்மார்க்கமே

எங்கள் வினைதீர் எமையாளும் பாபா
உங்கள் பார்வை உயர்நிலை தருமே
திங்கள் ஞாயிறு திருவடி யானவா
மங்கள வாழ்வும் மனையும் அருளே

ஏகாந்த நிலைதா ஏற்றிடு மேனிலை
ஆகாயிந்த அவதாரம் அற்புதம் அற்புதமே
வேதாந்த பொருளே வேதனை தீர்ப்பாயே
நாதாந்த மயமே நாடினேன் பாதமே

ஐம்பூத ஒடுக்கம் ஐயா உன்னிடமே
தம்பாத கமலத்தில் தரணியை கொண்டவா
நம்பாதம் நாமுணர நன்னெறி காட்டுவார்
உம்பாதமே சரணம் உரைத்தேன் நானுமே

ஒத்த இடத்தில் ஒளியாய் இருப்பவனே
பித்த மகற்றி பிழை பொறுத்து
சித்த ணாக்கியே சிறந்திட வைப்பாயே
அத்த னேயென் ஆருயிரே ஆதரிப்பாயே

ஓதாது உணர்ந்திட ஒளி அருள்வோனே
பாதாதி கேசம் பரவிய பரஞ்சுடரே
மாதாதி ருவடியின் மகிமை சொன்னவா
வேதாக மங்கள் விண்டிடும் மெய்யே

ஔஷதம் நமக்கு ஒளியே யன்றோ
கௌசிகன் போலவே கடைத்தேற வேண்டுமே
மௌனம் உணர்ந்திட மனமும் நின்றிட
யௌவனம் போகுமுன் யமுனை அறிவாயே

கண்ணே மணியே கரும் பூவே
எண்ணே எழுத்தே எட்டு இரண்டே
தண்ணே ரொளியே திருவடி கமலமே
உண்ணே அமுதம் உள்ளொளி பெருகுமே

காரணமாய் காரியமாய் கண்ணில் உள்ளானே
பூரணமாய் இலங்கும் புண்ணிய மணியே
நாரணனாய் சிவனாய் நான்முகனும் ஆனாயே
ஓரணுவாய் எங்கும் ஒளியாய் இருப்பவனே

கிட்டுமோ ஞானம் கிருஷ்ண மணியை
மட்டுமே அறிந்தால் மனம் நின்றால்
மாட்டுமே ஒளி மாதவம் செய்தால்
எட்டுமே திருவடி எங்குரு சொன்னாரே

கீதை உரைத்தான் கண்ணன் அன்று
பாதை வகுத்தாய் பாபா இன்று
காதை தீட்டினால் கேட்கலாம் நாதம்
மாதை பணிந்தால் மாயை நீங்கும்

குற்றம் நீக்கி குணாதீதன் ஆக்கு
சுற்றம் போற்ற சுகமெலாம் அருள்
முற்றும் நிறைய முனிவர்கள் இருக்கவே
அற்றம் ஒளியாகி ஆனந்தமாக செய்யே

கூறுவேன் நீதானே குணப்பெருங் குன்றம்
ஏறுவேன் உன்னால் ஏறாநிலை மிசையே
தேறுவேன் ஞானத்திலே திருவடி துணையே
மாறுவேன் ஒளியாக மகாஞானி கருணையே

கேட்டது கிடைத்தது கிருபாகரா பாபா
பாட்டது பலநூறு பாடிட வைத்தாயே
காட்டது கண்தானே கருணை பிறப்பிடம்
நாட்டது சன்மார்க்கம் நானிலம் உய்யவே

கெண்டை இரண்டு கருவாய் அமைந்ததே
மண்டை நடுவில் முன்னால் துலங்குதே
அண்டர் கோன் அமர்ந்த இடமே
விண்டார் பலரே வீண்என தள்ளாதே

கையற விலாநடு கண்புருவ பூட்டு
பையற பார்த்து பூரித்து ஒளிரவே
பொய்யற வாழ்ந்து புண்ணிய பாவந்தீர்
மெய்யற லாகாது மெய்யோடு நில்லே

கொண்டது என்னை கொடுத்தது உன்னை
விண்டது ஞானம் வினைதீர் பாபா
தொண்டது உபதேசம் தொடுத்தேன் பாமாலை
கண்டது உந்தன் கண்களை காப்பாயே

கோயில் உள்ளமே கருவரை கண்களே
தாயில் சிறந்த தயாபரா பாபா
ஈயில் மீளேனே இருப்பாய் என்உளே
பாயில் கிடவாமல் பார்போற்ற வாழவை

சத்தியம் சிவம் சுந்தரம் சாந்தம்
நித்தியம் கிட்டுமே நிமலனடி பணிந்தாலே
பத்தியம் அன்பும் பண்பும் இருப்பதே
உத்தியும் காட்டி உனதடி சேர்ப்பாயே

| | | | |
|---|---|---|---|
| சாவை | வென்றிட | சாயிநாதா | அருளே |
| பாவை | அருள்பெற | பாபாநீ | துணையே |
| ஆவை | ஊவில் | ஆடிட | செய்யே |
| சேவை | ஞானமே | செய்திட | வைப்பாயே |
| | | | |
| சின்மய | ரூபமே | சிற்சபை | அப்பனே |
| என்மன | கோவில் | எந்நாளும் | இருப்பாயே |
| பொன்மய | மேனியை | பெற்றிட | அருளே |
| கன்மன | குரங்கை | கட்டிப் | போட்டிடு |
| | | | |
| சீராக | நீயிருந்து | சின்மயம் | ஒளிர்கிறதே |
| யாராக | இருந்தாலும் | யமுனை | சேரணுமே |
| பாராக | இருப்பது | பகலவனாக | ஜொலிப்பது |
| வேராக | ஊன்றினால் | வேண்டுவது | பெறலாமே |
| | | | |
| சுக்கு | போலவே | சரீரம் | காயணுமே |
| எக்கு | போன்றதே | எண்சாண் | உடலே |
| கக்கு | மும்மலத்தை | கண்கள் | ஒளிருமே |
| மக்கு | போலன்று | மனந்தனை | நிறுத்தே |
| | | | |
| சூரியன் | வலதுகண் | சந்திரன் | இடக்கண் |
| ஆரியன் | நாமானால் | ஆர்த்தெழும் | ஜோதியே |
| காரியம் | நமக்கு | கண்மணியில் | இருப்பதே |
| காரிகை | குமரியின் | கருணை | வேண்டுமே |
| | | | |
| செல்வம் | நீதானே | சத்திய | சாயியே |
| வில்வம் | சூடியவன் | விரைந்து | வரணுமே |
| பல்வம் | சமாகாது | பகவான் | ஒருவரே |
| நல்வம் | சமிதுவே | நன்மார்க்கம் | சன்மார்க்கம் |
| | | | |
| சேரும் | இடமறிந்து | சேரணும் | கண்ணிலே |
| ஊரும் | போற்றணும் | உத்தமன் | ஆகணும் |
| பேரும் | பெறணும் | பேரின்பம் | கூடணும் |
| ஆறும் | இரண்டாகி | ஆடுகிறது | கண்ணிலே |
| | | | |
| சொல் | சத்தே | சித்தாகி | ஆனந்தமாம் |
| சொல் | சத்தியமே | சாயி | காப்பாரே |
| சொல் | சகலமும் | சட்சு | தீட்சையிலே |
| சொல் | சாஸ்வதமாய் | சிரஞ்சீவியாய் | வாழலாமே |

சோம்பி இருப்பதல்ல சும்மா இருப்பது
தேம்பி அழுதால் தேவன் வருவானே
தூங்கி இருப்பதல்ல தூங்காமல் தூங்குவது
வாங்கி வந்திருந்தால் வரவு செலவாமே

தந்தை சாயியே தாயும் சாயியே
முந்தை வினைதீர் முழுமுதற் பொருளே
சிந்தை முழுதும் சிவமாக வைப்பாயே
கந்தை மாற்றியே கடுவெளி போகணுமே

தாகம் தீர்ப்பாயே தனயன் எனக்கே
போகம் கடவுளே புருஷோத்தமா உன்னோடே
நாகம் வெண்சாரை நடுவூடிச் செல்லணுமே
ஊகம் சரியாகி உண்மை உணரணுமே

திங்கள் இடக்கண் திகழணும் சூரியனால்
உங்கள் பெருமை உலகோர் உணரணும்
எங்கள் பாவம் எல்லாம் போகணும்
தங்கள் கருணை தயவு வேண்டுமே

தீயாய் இருக்கும் தீனதயாளா சாயிபாபா
சேயாய் நானே சேர்ந்தேன் உன்னிடமே
பேயாய் கணங்களாய் பூதமாய் வாழாமல்
நீயாய் நானும் நிலைத்திட அருளே

துன்பம் ஏதுமில்லை தூய்மை வாழ்வானால்
இன்பம் எந்நாளுமே இகபர வாழ்விலே
அன்பும் பண்பும் அமைதியும் இருந்தாக்கால்
என்பும் உருகுமே எட்டிரண்டு அறிந்தாலே

தூயவரே எங்கள் துக்கம் போக்குவாயே
மாயவரே உந்தன் மகிமை சொல்லரிது
தாயவரே என்பதை திருவடியால் உணர்ந்தால்
காயவரே ஆனாலும் கனிவிப்பார் சாயியே

தெலுங்கு தேசத்தில் தெற்கே பர்த்தியில்
அலுங்காமல் குலுங்காமல் ஆடிவரும் அழகே
மலங்க விழிக்கும் மன்பதை காப்பீரே
துலங்க வேண்டுமே தூயவரே என்னுளே

தேறுதல் தரும்பாபா தேவாதி தேவா
மாறுதல் உலகில் மன்னவா வேண்டுமே
ஊறுதல் ஒளியிலே உலகோர் பெறவே
சேருதல் வேண்டும் சிங்கார திருவடியில்

தைதை எனகுதிக்கும் தடுமாறும் மனதை
வைவை திருவடியில் வழுத்தியே நின்றால்
பைபை யாகஓடியே பாழ்வெளி தாண்டுமே
கைகை இருக்கை கண்களே உணர்வீரே

தொன்று தொட்டு தொடரும் தெய்வமே
அன்று தொட்டு அடியேனுன் அடைக்கலமே
இன்று தொட்டு இனிவரும் காலமெலாம்
நன்று ஆகவே நம்பினேன் பாபாவே

தோன்றும் இடமெலாம் திருவடி காட்சியே
சான்றும் பலப்பல சான்றார் பகன்றாரே
ஆன்றவிந் தடங்கிய ஆன்றோர் துணையே
மூன்றும் ஒன்றாய் முடிந்தால் காணலாமே

நாலும் இரண்டும் நவில வைத்தவா
நூலும் பல வெளிவர நல்லருள் புரிந்தவா
பாலும் நீருமாய் பரவியுள் இருப்பவா
வேலும் மயிலுமாய் வேதனை தீர்ப்பவா

நற்கருணை தெய்வமே நால்வேத முடிவே
பொற்பாதம் கதிஎன பர்த்திக்கு வந்தேனே
சற்குருவே சத்திய சாயிபாபா பகவானே
சிற்சபை அப்பனே சித்தாடும் சிவமே

நித்தமும் உன்னையே நினைத்து வாழ்கிறேன்
சித்தமும் உன்பால் சிவமேஎன இருக்கிறேன்
பித்தமும் தெளிந்திட பேதமையும் மாறிடவே
சுத்தமும் சுகமும் சுகானுபூதி யுந்தா

நீர்மேல் நெருப்பாய் நீயன்றோ திகழ்கிறாய்
பார்மேல் பகலவனாய் பார்க்க வைக்கிறாய்
யார்மேல் எனபாராதே யாவரும் கடவுளே
சீர்மேல் திரைகளை சீக்கிரம் நீக்கிடே

நுண்ணிய ஒளியாய் நின்றிலங்கும் கண்ணே
பண்ணிய பாவங்கள் பரிதவிக்க விடுதே
புண்ணிய மோங்கவே புகழுடல் பெறவே
கண்ணிய னாவேன் கண்ணாநீ அருளே

நூறாண்டை நெருங்கும் நித்ய ஜோதியே
பாறண்டை எமக்கும் பரிந்தருள் பாபாவே
பாராண்ட மன்னரும் பரிதவித்தார் அறியாமையே
சீராண்ட தேவா சீக்கிரம் அருள்வாயே

நெற்றி நடுஉள் நீள்மரமாய் நின்றாயே
பற்றி உன்திருவடி பக்கமாக நின்றேனே
ஒற்றி இருக்கும் ஒளியே அழைப்பாயே
புற்றி லிருந்தெழும் பாம்பென ஓடிடவே

நேத்திரம் இரண்டு நேராக நோக்கவே
காத்திரம் உள்ளது கடக்கலாம் தோணியிலே
பூத்திரும் கனியலாம் பூதங்கள் ஒன்றானதே
சாத்திரம் சொல்லுமே சாயிநாதன் காப்பாமே

நொந்து மனம்வாடி நீயேகதி என வந்தேனே
வந்து அருளிடு வரந்தந்து வாழ்த்திடு
வெந்து போகணும் வெட்ட வெளியிலே
சந்து பொந்திலே சரக்கு இருக்குதே

நோக்கம் ஒளியாதலே நாடினேன் உன்பாதம்
தாக்கம் சித்தர்களே தடுமாறாது காப்பாயே
ஊக்கம் தருவாயே ஊர்த்துவம் ஏற்றுவாயே
ஆக்கம் ஞானதானமே ஆதரிப்பாய் அருள்வாயே

பக்தி ஊட்டி பாமரனை நல்லாக்கும்
சக்தி உள்ள சத்திய சாயி பாபாவே
முக்தி பெறவே முனைந்தேன் நானுமே
சக்தி அருள்பெற சாயிநீயும் அருள்வாயே

பாடினேன் பலநூறு பக்தியுடன் உன்மீதே
ஆடினேன் அறியாமலே ஆடினேன் ஆனந்தமாக
நாடினேன் திருவடி நல்லருள் பெறவே
சாடினேன் தீயோரை சன்மார்க்கம் தழைக்கவே

பின்னால் வேண்டாம் பிறப்பு இறப்பு  
முன்னால் இருந்ததை முடிக்க பாடுபடு  
நன்னாலில் ஒன்றைபற்ற நாலில் ஒன்றைநிறுத்து  
முன்னாலில் ஒன்று முதிர்ந்தால் முக்தியாமே

பீடுநடை போடணும் பிதாயுன் பாதையிலே  
வீடுபேறு கிட்டணும் விரைந்து அருளே  
நாடுபோற்ற வாழணும் நாடுவீர் திருவடியை  
சூடுகொண்ட திருவாடுதுறை சூரியனும் சந்திரனுமே

புதுமை நான்செய புத்தியை தெளிவாக்கு  
பதுமை போலானால் பார்க்கலாம் பகவானை  
முதுமை வாராது முக்தி கிட்டணுமே  
அதுமை யல்நீக்கி அதிலேயே இருந்தாலே

பூவது கண்மலரே பூரிக்கும் கருப்பு பூ  
நோவது நோவாமல் நோன்பு நோக்கணுமே  
பாவது அருட்பா பரவெளி காட்டுமே  
ஆவது ஞானியாக அகரஉகர ஒளியாலே

பெண்கள் ஆன்மாக்கள் பாருயிர் எல்லாமே  
ஆண்கட வுள்மட்டுமே அணுவுக்கு அணுவானவன்  
மண்முத லைந்துபூதமும் மாயையுங் சேர்ந்ததே  
கண்முத லாயயிக்கடம் கண்டு உணர்வீரே

பேணி காக்கணும் பொன்னான உடலை  
நாணி வருந்தணும் நம்சிறுமை நினைந்து  
பேணி கூடணும் பெற்றோரை குருமாரை  
வேணி அருள்வாள் வேதமும் அறியலாமே

பொன்னான மேனியை பெறுவதே பேரின்பமாம்  
கண்ணான கண்மணியை கண்டே களிப்பதாம்  
எண்ணான எழுத்தான அகரஉகரம் அதுதானே  
விண்ணாள போகலாம் விரைந்து வருவீரே

போதும் என்றமனமே பொன்செயும் மருந்து  
வாதும் சூதும்விட்டே வஞ்சமிலாது வாழ்ந்தால்  
காதும் ஒலிகேட்கும் கண்ணும் ஒளி பார்க்கும்  
யாதும் ஊரே யாவரும் கேளீர்

மனிதன் என்பவன் மனபக்குவ மாக்குபவன்
புனிதன் ஆகஎனில் பகவானை உள்ளேபார்
இனிதன் நிலையை இல்லாமல் ஆக்குவான்
கனிதன் கண்என கண்டு கொள்வான்

மாதர் எல்லோரும் மாதாவே போற்று
மாதரை பணிந்தாலே மாயையை வெல்லலாம்
மாதாவே தருவாள் மாநிதியம் அமுதம்
மாதா அருளினாலே மனுக்குலம் உய்யுமே

மிருகம் போல்வாழும் மானிடரே சிந்திப்பீர்
பருக அமுதிருக்க பாழான மதுவை நாடுகிறாயே
உருக வேண்டாமோ உள்ளம் பண்படவே
தருக இதயத்தை தவம்செய் காப்பாரே

மீண்டும் பிறக்காதே மரணமிலா வாழ்வுபெறு
வேண்டும் நற்குணம் வேதனை மாறும்
யாண்டும் திருவடியே யாசிக்கிறேன் பாபாவே
தீண்டும் இன்பம் தீயானவா தருவாயே

முதலில் வேண்டும் முன்னவனே உன்கருணை
நுதலில் கண்ணில் நுழைந்திட அருளே
இதழில் புன்னகை இருக்கணும் எப்போதும்
மதிலில் பூனையாய் மனம் தடுமாறாதே

மூன்றும் ஒன்றான முச்சுடரே உயிராம்
ஊன்றும் போதிலே ஊர்த்துவ கதியாமே
சான்றும் பலப்பலவாய் சித்தர்கள் உரைத்தாரே
ஈன்றும் கன்னியே ஈடில்லா வாலையே

மென்மை இருந்தால் மேன்மை கிட்டுமே
இம்மை மறுமை இரண்டுக்கும் திருவடியே
உம்மை மறந்தால் உலகில் வாழ்வேது
உண்மை இருந்தால் உயர்வே எந்நாளுமே

மேகம் போல்நீயும் மாரியாகணும் அன்பால்
தாகம் தீர்க்கணும் திருவடியாலே ஆன்மாவின்
ஊகம் சரியாகணும் உடலுறுதி பெறுமே
வேகம் ஆகாதே விவேகம் வேணுமே

| | | | |
|---|---|---|---|
| மையல் | கொள்ளாதே | மயக்கம் | மாயையே |
| பையில் | அகப்பையில் | பரசிவம் | ஒளிருகிறதே |
| நைநை | என்றே | நர்த்தமிடும் | மனதினை |
| கைவை | கருத்துவை | கண்மணியே | கதிஎனவே |
| | | | |
| மொத்த | வாழ்வும் | மாதாவிடம் | ஒப்படைத்து |
| சித்த | மனைத்தும் | சிவமாக | இருந்திடு |
| பித்த | மகலும் | பேரின்பம் | கூடும் |
| உத்த | மனாகலாம் | உலகோர் | போற்றுவர் |
| | | | |
| மோட்சம் | வேண்டியே | மாயையை | பணிந்தேனே |
| தாட்சண் | யமின்றி | தடுமாறி | அலைந்தேனே |
| தாட்சா | யணியுன் | தயவு | வேண்டுமே |
| தீட்சை | கொடுத்து | திகழணும் | குருவாகவே |
| | | | |
| மௌனம் | பேசாதது | மகாமேரு | மணியே |
| சௌரம் | அடங்குமே | சன்மார்க்கி | ஆனாலே |
| கௌமாரன் | பரீட்சித்து | காப்பானே | வேலாலே |
| ஔவை | சொன்னாளே | ஔஷதம் | லலாடமதிலே |
| | | | |
| யகாரம் | பத்தாமே | யமுனை | கூடுதலே |
| சிகாரம் | நாயோட்டுமே | சிவமாய் | மாறலாமே |
| அகாரம் | சூரியனே | அருந்தமிழில் | எட்டே |
| உகாரம் | சந்திரனே | உரைத்தார் | இரண்டே |
| | | | |
| யாவரும் | வருக | யவரும் | அஉவாலே |
| பா வரும் | பகவானை | பணிந்தாலே | பக்தியாலே |
| மூவரும் | ஒன்றாய் | முதிர்ந்ததே | பாதமாம் |
| ஈ வரும் | இன்பமே | ஈடில்லா | ஞானமே |
| | | | |
| யுவன் | உலகில் | யகாரம் | இருப்பவனே |
| யுவதி | நாமெலாம் | யமுனை | கூடணுமே |
| புவன | மிருக்குது | பொற்சபை | உள்ளே |
| கவன | மாகயிரு | கண்மணி | பாரே |
| | | | |
| ரகசியம் | ஒன்றுமிலை | ரட்சிக்கும் | கடவுளிடம் |
| பரசியம் | ஆகவே | பகர்ந்தார் | சித்தர்களே |
| அவசியம் | உணரணும் | ஆன்மாவை | அறியணும் |
| தவசியும் | கடவுளே | தலைவனை | அறிந்ததாலே |

ராம மந்திரமே ரட்சித்தது அனுமனை
ராம மந்திரமே ராகதுவேஷ மாற்றும்
வாம னனாய் வந்தவனும் அவனே
இராம லிங்கமே ரட்சிக்க வந்தானே

ரிஷியும் இல்லறத்தை ருசித்தே வாழ்ந்தனர்
ருசியும் பசியும் ராப்பகலும் இல்லையே
கசியும் மனத்தினால் கண்ணீர் பெருகுமே
வசியும் அங்கேயே தவசி நீதானே

ரீங்காரம் கேட்குமே ரிஷிபலர் ஆசியாலே
ஆங்காரம் போனாலே ஆன்ம காட்சியே
நீங்காதே ஒருபோதும் நில்லே திருவடியிலே
ஏங்காதே காப்பான் ஏற்பான் நம்மையுமே

ருத்திரன் வருமுன் ரிஷியாக பாரு
பத்திரம் திருவடியே பாதம் பார்த்திரு
உத்திரம் இருப்பது உன்கண்ணில் நீக்கப்பார்
சத்திரம் அலையாதே சாத்திரம் பாரு

ஈஸ்வராம்பா புதல்வா ஈடில்லா பாபா
ஈஸ்வரன்தான் நீயப்பா ஈர்த்திடு எம்மை
நீசனாய்வாழ் மனிதன் நல்லவனாய் மாறிட
வாசஞ்செய் பர்த்தியிலே வல்லவர் சரணமே

அற்புதமே வாழ்வெலாம் அழகே பாபாவாம்
அற்புதமே நடந்தால் அற்புதமே நின்றால்
அற்புதமே பேசினால் அற்புதமே இருந்தால்
அற்புதமே பார்த்தால் அற்புதமே பாபாவாம்

லட்டு தந்தாய் லலாடம் இருப்பவனே
புட்ட பர்த்தி பாபாவே நீயேகதி
சுட்டு நீயெனை சுந்தரனாய் ஆக்குவாயே
சுட்டி திருவடி சுகம்பெற அருளே

உன்னை பார்க்கிறேனே உன்கவலை போக்கிடுனை
என்னை தேற்றிய ஏந்தலே பாபாவே
இன்னுயிர் காத்த இணையிலா சாயியே
மன்னுயிர் உய்த்திட மகிமைதா எமக்கே

கண்ணா மூச்சியாடிய கட்டழகு பெட்டகமே
ஒண்ணா நயனத்தின் ஒளியை காட்டியவரே
விண்ணா வேந்தே விரைந்தருள் தருவாயே
எண்ணா திருந்தால் எப்படியான் உய்வேன்

ஒரே பார்வையிலே ஒளியை ஊட்டியவா
ஒரே வழியே ஓங்கார மயமே
ஒரே கடவுள் ஒரே குரு
ஒரே ஆன்மா ஒளியாய் உடலிலே

சத்தியம் சர்வமும்நீயே சாயி பாபாவே
நித்தியம் கிட்டுமே நின்னடி சேர்ந்தாலே
பத்தியம் நன்னெறியே பகவான் காப்பாரே
உத்தியும் காட்டுவார் உத்தமன் ஆக்குவார்

உட்காரு உட்காரு உபதேசம் இதுவே
உரைத்தாய் எனக்கு உன்னத தீபாவளியிலே
உட்கார்ந்து உபதேசம் உலகர்க்கு சொல்கிறேன்
உரைப்பது சன்மார்க்கம் உன்சனாதன தர்மம்

ஷீரடி பாபாவோ சீர்திகழ் பர்த்தியிலே
ஈரடி திருவடி ஈர்த்தது எம்மையும்
ஓரடி முன்னேற ஒளியூட்டி அருளே
பாரடி கண்ணிலே பார்ப்பாய் பாபாவே

அன்பும் பண்பும் அமைதியுமே உருவானவா
என்பும் தோலுமாய் எந்தெய்வம் சாயியே
வம்பு வழக்கு வியாச்சியம் விட்டே
நம்பும் அடியார் நல்லருள் பெறுவரே

சாந்தி கிட்டுமே சாயியுனை கண்டாலே
காந்தி பெருகுமே கண்ஒளி கண்டாலே
பூந்தி இருக்குதே பூவிலே கரும்பூவிலே
தாந்தீ எனஉணரே தக்கபடி அருள்வான்

நல்லதை பார் நல்லதை நினை
நல்லதை சொல் நல்லதை செய்
நல்லதே நடக்கும் நல்வாழ்வு வாழலாம்
நல்லதை சொன்ன நாயகன் சாயியே

சேவையே குறிக்கோள் சேரலாம் திருவடி
பூவையே உணர்ந்தால் பூரிப்புடன் பேரின்பமே
சாவையே வெல்லலாம் சாயிநாதனை பணிந்தாலே
பாவையே சக்தியே பாலாவே பாபாவே

பாடிப் பணிதலே பாபாயுன் பாதத்திலே
ஆடி மகிழ்வதே ஆனந்தம் திருவடியிலே
ஆடி வந்ததே ஆனந்தமாய் இந்நூலுமே
மாடி ஏறிநான் மகிழ்ந்து இருக்கணுமே

சாயிநாதா தந்தருள் செல்வம் எனக்கே
வாயினால் வார்த்தையால் வந்தனை செய்கிறேன்
ஈயின்பம் உணரணும் ஈரடி கண்மணி
தாயினால் கிட்டுமே தண்ணருள் அமுதம்

ஒருநூறு பாடல் ஒளியே உன்மீது பாபா
ஒருநூறு ஆண்டு ஒளிர்ந்திடு எம்மீது பாபா
இருநூறு ஆண்டு இருந்திடு அருளிடு பாபா
வருநூறு மாந்தரை வல்லவ ராக்கிகா பாபா

## சுபம்

## என்னை காக்கும் நாகர்கோவில் அன்பர்கள்



பரமேஸ்வரன்



C. சுப்பிரமணியம்



நீலகண்டன்

# சத்ய சாய் பாபா



உலகில் பிரவேசம் : 23-11-1926 **கார்த்திகை மாதம் சோமவாரம் திருவாதிரை நட்சத்திரம் அதிகாலை.**

இடம் : **ஆந்திரமாநிலம் - புட்டபர்த்தி**

தாய் : **ஈஸ்வரம்மா**

தந்தை : **பெத்த வெங்கப்பராஜு**
**8-வது குழந்தையாக அவதாரம்**

"**நான் தான் சாயி பாபா**" என உலகுக்கு உரைத்த நாள் - **23-05-1940**

உலகுக்காக பிறந்த நான் உலகுக்கு சொந்தம் என உரைத்து வீட்டை துறந்து, "**நான் சாய்**" என்று **20-10-1940-ல்** அருளினார்.

**முதல் உபதேசம் :**

**"மானஸ பஜரே குரு சரணம்**
**துஸ்தர பவ சாஹர தரணம்"**

குருவின் திருவடியில் லயித்து மானஸ பூஜை செய்வதே பிறவிக் கடலிலிருந்து மீள வழி!

"பஞ்ச பூதங்களையும் இணைத்து உருவாக்கப்பட்ட மனித உடலில் படைப்பு அனைத்தும் அடங்கும்! அது எவ்வாறெனில், அண்ட அண்டத்தைக் கண்ணின் கருவிழியாகக் கொள்ளலாம்! பிண்ட அண்டம் என்பது **கரு விழிக்குள் இருக்கும் உள்வட்டமாகும். கண்மணி பிரம்ம அண்டம் என்பது அதில் உள்ள ஒளியாகும்! அந்த ஒளியின் பிரகாசமாக இருப்பது ப்ரம்மம்!"**

*ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டிய உண்மை இது!*

***



# பாபா உதிர்த்த முத்துக்கள்



| | |
|---|---|
| There is only one Religion<br>The Religion of Love | ஒரே ஒரு மதம்<br>அது அன்பு மதம் |
| There is only one Language<br>The Language of Heart | ஒரே ஒரு மொழி<br>அது இதயத்தின் மொழி |
| There is only one Caste<br>The Caste of Humanity | ஒரே ஒரு ஜாதி<br>அது மனித ஜாதி |
| There is only one God<br>He is Omnipresent | ஒரே ஒரு கடவுள்<br>அவன் எங்கும் இருக்கிறான் |
| Truth is God<br>God is Truth | உண்மையே கடவுள்<br>கடவுளே உண்மை |
| Love is God : God is Love<br>So Live in Love | அன்பே கடவுள்: கடவுளே அன்பு<br>எனவே அன்பிலேயே வாழ்ந்திடு |
| Love all<br>Serve all | எல்லோரையும் நேசி<br>எல்லோருக்கும் சேவைசெய் |
| Be good<br>See good<br>Do good | நல்லவனாக இரு<br>நல்லதையே பார்<br>நல்லதையே செய் |
| The Voice of God Can be heard only in the depth of Silence | மௌனத்தின் ஆழத்தில் மட்டுமே<br>இறைவனின் குரலை கேட்க முடியும். |
| The Light in you<br>You are in Light<br>The Light and you are one | ஜோதி உன்னிடத்தில் இருக்கிறது<br>நீ ஜோதியில் இருக்கிறாய்<br>ஜோதியும் நீயும் ஒன்றே |

| | |
|---|---|
| Let. Truth be your Father<br>Love be your mother<br>Wisdom be your Son<br>peace be your Sister<br>Devotion be your Brother<br>Yogis be your Friends | சத்தியம் உனது தந்தை<br>அன்பு உனது தாய்<br>நுண்ணறிவு உனது மகன்<br>அமைதி உனது சகோதரி<br>பக்தி உனது சகோதரன்<br>யோகிகள் உனது நண்பர்கள் |
| Hands that help are holier than the lips that pray | பிரார்த்தனை செய்யும் உதடுகளை காட்டிலும் உதவி செய்யும் கரங்களே புனிதமானது. |
| Start the day with Love<br>Fill the day with Love<br>Spend the day with Love<br>This is the way to God | அன்புடன் நாளைத் துவக்கிடு<br>அன்பால் நாளை நிரப்பிடு<br>அன்போடு நாளை முடித்திடு<br>இதுவே கடவுளை அடையும் வழி |
| Watch your words<br>Watch your Actions<br>Watch your Thoughts<br>Watch your Character<br>Watch your Heart | உன் வார்த்தைகளை கவனி<br>உன் செயல்களை கவனி<br>உன் எண்ணங்களை கவனி<br>உன் தன்மையை கவனி<br>உன் இதயத்தை கவனி |
| The Three D' S are<br>Duty - Devotion - Discipline<br>Full effort is Full Victory | மூன்று 'D' க்கள்<br>கடமை, பக்தி, ஒழுக்கம்<br>முழு முயற்சியே முழு வெற்றி |
| Help Ever<br>Hurt Never | எப்போதும் தொண்டு செய்<br>எவரையும் துன்புறுத்தாதே |
| The Four 'S' are<br>Self Sacrifice<br>Self Confidence<br>Self Satisfaction<br>Self Realisation | நான்கு 'S' கள்<br>தன்னலத்தியாகம்<br>தன்னம்பிக்கை<br>சுயதிருப்தி<br>ஆன்மாவை உணர்தல் |

## ஞானசித்தர் ஜோதி இராமசாமி தேசிகர் சீடர்களுடன்



ஞானசற்குரு - ஸ்ரீலஸ்ரீ -

# சிவசெல்வராஜ் அவர்கள்

## பூவுடல் எடுத்த 50 ஆண்டுகள் 'பொன்விழா'

## திருவடியை சரணடைந்து

## 25 ஆண்டுகள் 'வெள்ளிவிழா'



பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின் புகழ்விளங்க வந்த அய்யனே,
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப் புதையலான ஞான மெய்யனே
மாரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை மானுடர்க் களிக்க எண்ணியே . . .
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த 'மாகுரு சிவ செல்வ ராஜரே'
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே கருமணியுள் கனலு மாகியே
கருவறையும்; கல்லறையும்; காத்தருளும் கடவுளெனக் கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும் ஆஃத்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானமீயும் அற்புத மெய்ஞ்ஞான குருபரா . . !


M.G. ராஜா
100 வருட
மக்கள் சேவையில்
பெருமகிழ்ச்சி அடைகிறோம்.
EMJEEAS
PRODUCTS
எம். கோபாலன் ஆசான்
சித்த ஆயூர்வேத வைத்தியசாலை
130, பாலமோர்ரோடு, நாகர்கோவில் – 1.
Visit us:www.mgopalanasan.com
230156, 227791, 225466

பாபாவிடம் ஒரு வெளிநாட்டு பெண்மணி கேட்டது :

*"I Want Peace"*

பாபாவின் பதில் :

முதல் இரண்டையும் விட்டால் மூன்றாவது கிடைக்கும்

**I** என்ற ஆணவம் **Want** என்ற ஆசை இவ்விரண்டும் நீங்கினால் அமைதி கிடைக்கும்.

ஒவ்வொரு மனிதனும் கடைபிடிக்க வேண்டிய முக்கியமானது ஐந்து :

**சத்தியம் - தர்மம் - சாந்தி - பிரேமை - அஹிம்சை**



# ஆசிரியர் குடும்பம்



# எங்களை காக்கும் மும்மூர்த்திகள்



த. முருகேசன் G. கோபாலகிருஷ்ணன் G. நாராயணா

ஞானசற்குரு – ஸ்ரீலஸ்ரீ –

**சிவசெல்வராஜ்** அவர்கள்

பூவுடல் எடுத்த 50 ஆண்டுகள் 'பொன்விழா'

திருவடியை சரணடைந்து 25 ஆண்டுகள்

'வெள்ளிவிழா'



பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின்
புகழ்விளங்க வந்த அய்யனே,
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப்
புதையலான ஞான மெய்யனே
மாரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை
மானுடர்க் களிக்க எண்ணியே . . .
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த
'மாகுரு சிவ செல்வ ராஜரே'
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே
கருமணியுள் கனலு மாகியே
கருவரையும்; கல்லரையும்; காத்தருளும் கடவுளெனக்
கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும்
ஆஃத்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானமீயும்
அற்புத மெய்ஞ்ஞான குருபரா . . .!